உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 05.05.2026 • மலர் 04 • இதழ்: 125 • Edition : Nagercoil • 05.05.2026 • Vol : 04 • Issue : 125 • Page : 4 • Rs. 5/-

### முதல்வர் ஆகிறார் விஜய்...

# தமிழகத்தில் அமையும் மைனாரிட்டி

## அரசும், மக்கள் தீர்ப்பும் சொல்வது என்ன?

சென்னை, மே 5

மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு ஊடே வெளியான தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் தவெகவுக்கு சாதகமாக அமைந்துள்ளது. தனிப்பெரும்பான்மை பெறாவிட்டாலும் கூட தனித்துப் போட்டியிட்ட முதல் தேர்தலில் 105+ இடங்களை வசமாக்கியதே தவெகவுக்கு இமாலய சாதனைதான்.

ஆனாலும் ஆட்சியமைக்க 118 எம்எல்ஏக்கள் வேண்டுமென்ற நிலையில், அடுத்ததாக தவெக பக்குவமாகக் காய் நகர்த்த வேண்டிய மிகப்பெரிய சவால் எழுந்துள்ளது.

ஏற்கெனவே உண்மையான காங்கிரஸ் எங்கள் பக்கம் தான் என்று விஜய் சொன்னதால், திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ் வெற்றி எம்எல்ஏக்களோடு அங்கே தாவுமா அல்லது அதிமுக கூட்டணியில் இருந்து பாமக நழுவுமா என்பதே இப்போதைய பேசுபொருள். அப்படியான கணக்கு வழக்குகள் எல்லாம் ஓர்க் அவுட் ஆன பின்னர், தவெக மைனாரிட்டி அரசாக ஆட்சியில் அமரக் கூடும். தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் முதல்வராகக் கூடும். இது வரையிலான முடிவுகள் அடிப்படையிலான சாத்தியக் கூறுகள் இவையே.

தவெக ஆட்சிக்கு வந்த கதையை சற்றே துரிதமாக நாம் திரும்பிப் பார்ப்போம். பிப்ரவரி 2, 2024ல் தான் தவெக தொடங்கப்பட்டது. சரியாக 2 ஆண்டுகள் 3 மாதங்கள் நிறைவு செய்த கட்சிக்கு தமிழக மக்கள் பேராதரவை வழங்கியிருக்கிறார்கள்.

இந்தச் சூழலில் இது தவெகவின் எழுச்சியா இல்லை தமிழகத்தில் திராவிடக் கட்சிகளின் சறுக்கலா என்பது ஆழமான விவாதப் பொருள்.

அதன் அடிப்படையில், தவெகவின் வெற்றிக்கான காரணங்கள் சிலவற்றை பட்டியலிட்டால், அதில் தமிழகத்துக்கும் திரைக் கவர்ச்சிக்குமான பந்தம் முதலிடம் பெறும்.

"திரை நட்சத்திர வழிபாட்டில் ஊறிப் போன தமிழகத்தை நன்கு புரிந்து வைத்திருந்ததாலேயே திரைவாழ்வில் உச்சத்தில் இருந்த விஜய் கட்சி, அரசியல் என்ற பயணத்துக்கு முதலில் தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். அவருடைய நம்பிக்கை சோரம் போகவில்லை." என்கின்றனர் தேர்ந்த அரசியல் நிபுணர்கள்.

அடுத்ததாக அரசியலில் பெரிதும் அனுபவம் இல்லாத விஜய்க்கு தோதாக, தோளாடு தோளாக நிற்க விசிகவில் இருந்து விலகிய எலக்‌ஷன் ஸ்ட்ராடஜிஸ்ட் ஆதவ் அர்ஜூனா வந்து சேர்ந்தார். அவர் செய்த கிரவுண்ட் ஓர்க், அவர் வகுத்துக் கொடுத்த ஸ்ட்ராடஜிகளையும் விஜய் ஒரு 'மாணவ ஒழுக்கத்தோடு' கடைப்பிடித்திருப்பார் என்றே நாம் கருத வேண்டியிருக்கிறது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

திரைக் கவிர்ச்சி, எலக்‌ஷன்ஸ்ட்ராடஜிஸ்ட் துணையோடு விஜய்க்கு இன்னும் அதிகமாக பலன் கொடுத்தது அவர் கையிலெடுத்த எதிர்ப்பு அரசியல். தமிழகம் கடந்த 59 ஆண்டுகளாக திராவிடக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, மாறி மாறி திராவிடக் கட்சிகளை அரியணை ஏற்றிய பூமி. அப்படியிருக்க ஆளும் திமுக எதிர்ப்பு அரசியலை விக்கிரவாண்டி தொடங்கி தனது கடைசி நாள் பிரச்சாரம் வரை ஆக்ரோஷமாக பழகினார் விஜய்.

ஆனாலும் அதிலொரு சூட்சமத்தை தன்வசம் வைத்துக் கொண்டார். அதன்படி, திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்தாலும் திராவிடக் கொள்கைகளை விமர்சிக்கவில்லை. தனது கொள்கைத் தலைவர்களில் பெரியாரையும் சேர்த்தே வைத்திருந்தார். திமுகவுக்கு எதிராக கூரான வாளைச் சுழற்றிக் கொண்டே 'அதிமுக பலவீனமாகிவிட்டது; அதற்கு தலைமை சரியில்லை' என்று மீண்டும் மீண்டும் மேடைகளில் சொல்லி அதிமுக வாக்குகளுக்கும் வேட்டு வைத்துக் காட்டியிருக்கிறார்.

அத்தனைக்கும் முத்தாய்ப்பாக தனது பிரச்சார வாகனத்தில் தனது படத்துக்குப் பின்னணியில் அண்ணாவையும், எம்ஜிஆர் படத்தையும் பொறித்துக் கொண்டார். ஆக பெரியார், எம்ஜிஆர், அண்ணா என யாரையும் விஜய் விட்டுவைக்கவில்லை.

உங்களுக்கு அண்ணா, எம்ஜிஆர் பிடிக்கும் ஆனால் அதிமுக மேல் அதிருப்தியா என்னிடம் வாருங்கள், உங்களுக்கு பெரியார், அண்ணா பிடிக்கும் திமுக மேல் அதிருப்தியா என்னிடம் வாருங்கள் என்று விசாலமான கதவைத் திறந்து வைத்தார்.

மூன்றாவதாக தமிழ் தேசியம் என்று சீமான் பேசிக் கொண்டிருக்க திராவிடமும் தமிழ் தேசியமும் ஒன்று தான் என்று நாதக அதிருப்தியாளர்களையும் தன் பக்கம் வரவு வைத்துக் கொண்டார்.

கூடவே, "நான் எந்த மத நம்பிக்கைக்கும் எதிரானவன் இல்லை" என்று கூறி பல்வேறு தரப்பு வாக்குகளையும் தன் பக்கம் மடைமாற்றும் வேலையையும் பக்குவமாக செய்து வந்திருக்கிறார் என்றே நாம் புரிந்து கொள்ள வேண்டும் என அரசிய விமர்சகர்கள் சிலர் கூறுகின்றனர்.

ஆனால், இன்னொரு தரப்பினர் இதையெல்லாம் திட்டவட்டமாக மறுக்கின்றனர். விஜய்யின் வெற்றி முழுக்க முழுக்க திரை பிம்ப வழிபாட்டின் வெளிப்பாடு என்று அடித்துக் கூறுகின்றனர். விஜய் ஒரு 'கல்ட் பாலிடிக்ஸை' உருவாக்கி தமிழகத்தை ஆபத்தான பாதைக்கு இட்டுச் செல்லப் போகிறார் என்று ஆவேச ஆருடம் கூறுகின்றனர்.

இன்னொரு தரப்பினர், "இது மக்கள் தீர்ப்பு. அதை ஏற்கத் தான் வேண்டும். 5 ஆண்டுகால அரசு சலுகைகளுக்குப் பிறகும். கல்வி வளர்ச்சி, மகளிர் மேம்பாடு என பல்வேறு திட்டங்களுக்குப் பிறகும், அதே மாதிரியான திட்டங்கள் எங்கள் ஆட்சி அமைந்தால் நிச்சயம் தருவோம் என்று ஏற்கெனவே பலமுறை ஆட்சியில் இருந்த அதிமுக சொல்லியும், இளைஞர்கள் மட்டுமல்லாது பெண்கள், வயதானவர்கள், பாரம்பரியமாக திமுக, அதிமுகவுக்கு வாக்களித்தவர்கள் எனப் பலரும் தவெகவுக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்றால் மக்கள் ஏதோ ஒரு மாற்றம் வேண்டுமென விரும்பியிருக்கிறார்கள் என்றே அர்த்தம்.

மாற்றத்தை மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அரசியல் வரலாற்றில் கட்சி ஆரம்பித்த மிகக் குறுகிய காலத்தில் ஆட்சி அமைத்தோர்பட்டியலில் தவெக தனக்கும் ஓரிடத்தைப் பெற்றுக் கொண்ட நிலையில், இனி அதன் வாயிலாக மக்களுக்கான ஆட்சியாக நடைபெறுகிறதா என்பதை கண்காணிப்பதும், அவ்வாறு நடக்காத போது இடித்துரைப்பதே மாற்றத்தை தேர்ந்தெடுத்த மக்கள் சக்தியின் வேலையாக இருக்க வேண்டும்" எனக் கூறுகின்றனர்.

"இந்தத் தேர்தல் முடிவுகளின் வெளிப்பாடு மக்கள் வாரிசு அரசியலையும், டெல்லியில் இருந்து இயக்கி நடக்ககூடிய 'ப்ராக்ஸி அரசியலை'யும் வெறுக்கின்றனர் என்பது உறுதியாகியிருக்கிறது. கூடவே, தமிழக தேர்தல் வரலாற்றின் மிகப் பெரிய கரும்புள்ளியாக இருந்த ஓட்டுக்குப் பணம் கொடுக்கும் பழக்கத்துக்கு பலத்த அடி தவெகவால் வழங்கப்பட்டிருக்கிறது" என்று மூத்த பத்திரிகையாளர் ஒருவர் சுட்டிக் காட்டுகிறார்.



இனி தவெக தலைமையிலான ஆட்சி தான் என்பது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்ட நிலையில், விஜய் அரசியல்மயமாக்கப் பட்டிருக்கிறாரா, அவரது தொண்டர்கள் அரசியல்மயமாக்கப்பட்டிருக்கிறாரா, தவெகவுக்கு கட்சி கட்டமைப்பு இருக்கிறதா என்பதெல்லாம் விவாதப் பொருளாகவே இருக்க முடியாது.

அதேபோல் இனியும் ஹீரோ ஓர்ஷிப்பை ஊக்குவிக்காமல், மாநில உரிமைகளை சமரசம் செய்துவிடாமல், சமூகத்தின் விளிம்பு நிலை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்பவராக, அரசியல் முன்னோர் வகுத்த பாதைகளில் மக்கள் நலன் சார்ந்தவற்றை தழுவிக் கொண்டு விஜய் இருக்கட்டும் என்ற ஆதங்கக் குரல்களும் தமிழக அரசியல் களத்தில் ஒலிக்கின்றன.

தினதமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

## இன்று வணிகப் பெருங்குடிமக்கள் யாவருக்கும் வாழ்த்துகள்! திருமாவளவன்

சென்னை, மே 5

விசிக தலைவர் திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக இன்று வணிகர் நாளாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வணிகர் அணியும் வணிகர் சங்கங்களும் கொண்டாடி வருகிறோம். இந்நிலையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் தமிழ்நாடு அரசு அதிகாரப் பூர்வமாக இன்றுஆம் நாளை வணிகர் நாளாக அறிவித்துள்ளது. எனவே, தமிழ்நாட்டில் இந்த ஆண்டு இன்றுஆம் நாள் முதல்முறையாக அதிகாரப்பூர்வமாக வணிகர் நாள் கொண்டாடப்படுகிறது.

வணிகப்பெருங்குடி மக்கள் யாவருக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வணிகர் நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுக்கிடையேநடைபெறும்போரால்உலகளவில் வணிகம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவையும் வெகுவாக பாதித்திருக்கிறது. குறிப்பாக, கச்சா எண்ணெய் தட்டுப்பாட்டால் டீசல், பெட்ரோல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலை தமிழ்நாட்டில் பன்மடங்கு உயர்ந்திருக்கிறது.

இதனால் விலைவாசி கடுமையாக உயர்ந்து மக்களும் வணிகர்களும்பாதிக்கப்பட்டுள்ளனர். வணிகசமையல் எரிவாயு தட்டுப்பாட்டால் பல உணவகங்கள், தங்கும் விடுதிகள் உள்ளிட்ட ஏராளமான வணிக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. அவர்களது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. மத்திய அரசு கச்சா எண்ணெய் தட்டுப்பாட்டை போக்குவதற்கு போர்க்கால அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

ஒரே நாடு ஒரே வரி என்ற பெயரில் மத்தியில் ஆளும் பாஜக அரசால் திணிக்கப்பட்ட 'சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) சிறு வணிகர்களை முற்றாக அழித்துக்கொண்டிருக்கிறது. ஒரே வரி எனக் கூறப்பட்டாலும் பல அடுக்கு வரிகள் போடப்படுகின்றன. அதுமட்டுமின்றி கூடுதல் வரிகளும் (செஸ்) விதிக்கப்படுகின்றன. உலகில் எந்த நாட்டிலும் இத்தகைய கடுமையான வரிவிதிப்பு முறை கிடையாது. இதனால் வணிகர்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, இந்த ஜிஎஸ்டி வரி விதிப்பு முறையைத் திரும்பப் பெறவேண்டுமென மத்தியில் ஆளும் பாஜக வலியுறுத்துகிறோம்

ஆன்லைன் வர்த்தகத்தில் இப்போது பன்னாட்டு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. அன்னிய நேரடி முதலீட்டு விதிகளுக்குப் புறம்பாக அவை ஏராளமான தள்ளுபடிகளை அவ்வப்போது அறிவிப்பதால் சில்லறை வணிகம் மிகப்பெரிய நட்டத்தை சந்தித்து வருகிறது. இதுகுறித்து மத்திய அரசிடம் புகார் அளிக்கப்பட்டும் இதுவரை அதைத் தடுப்பதற்கு பாஜக அரசு எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. சட்டத்துக்குப் புறம்பான ஆன்லைன் வர்த்தகத்தைத் தடுத்துநிறுத்தவேண்டும்எனக்கேட்டுக்கொள்கிறோம்.

பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துவரும் சிறு வணிகர்களுக்கு பொதுத்துறை வங்கிகள் கடன் வழங்குவதில் ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய் கடன்களை எந்தவொரு பாதுகாப்பும் இல்லாமல் வழங்குகின்றன.. பொதுத்துறை வங்கிகள் மட்டுமின்றிதனியார்வங்கிகளும்சிறுவணிகர்களுக்குக் கடன் வழங்க முன்னுரிமை அளித்திட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கிறோம்.

மே 10 ஆம் நாள் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வணிகர் அணியின் சார்பில் வணிகர் மாநாடு சென்னையில் நடைபெறுகிறது. வணிகர்கள் விடுதலை சிறுத்தைகள் யாவரும் இம்மாநாட்டில் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

வணிகப் பெருங்குடிமக்கள் யாவருக்கும் மீண்டும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேப்பாக்கம் தொகுதியில் உதயநிதி ஸ்டாலின் வெற்றி பெற்றார்

சென்னை, மே 5

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிட்ட உதயநிதி ஸ்டாலின் வெற்றி முகம் கண்டுள்ளார். தற்போதைய நிலவரப்படி



வாக்கு எண்ணிக்கை விவரம்:

உதயநிதி ஸ்டாலின்: 51,540

செல்வம் தவெக; 41,659

ஆதிராஜாராம் அதிமுக: 12,652

ஆயிசா பேகம்: நாம் தமிழர் கட்சி 2,239

## சென்னை கொளத்தூர் தொகுதியில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தோல்வி

சென்னை, மே. 5

தமிழகத்தில் கடந்த மாதம் 23ந் தேதி ஒரே கட்டமாக சட்டசபை தேர்தல் நடந்தது. தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வருகின்றன. வாக்கு எண்ணிக்கையின் ஆரம்பத்தில் இருந்தே விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் அதிக தொகுதிகளில் முன்னிலை பெற்றது. நேரம் செல்லச்செல்ல தவெகவின்வெற்றிவாய்ப்பு பிரகாசமானது. ஆளுங் கட்சியான திமுக பல தொகுதிகளில் பின்னடைவை சந்தித்தது. முக்கிய அமைச்சர்கள் அனைவரும் பின்தங்கினர்.





இந்த நிலையில், கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட தி.மு.க. தலைவரும், முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தொடர்ந்து பின்னடைவை சந்தித்தார். அவரை எதிர்த்து போட்டியிட்ட தவெக வேட்பாளர் வி.எஸ். பாபு முன்னிலை பெற்றார். கட்சியின் தலைவரே பின்னடைவை சந்தித்தது திமுகவினரை அதிர்ச்சியடைய வைத்தது.

பிற்பகலில் வெற்றி நிலவரங்கள் படிப்படியாக வெளியாகத் தொடங்கின. கொளத்தூர் தொகுதியில் தொடர்ந்து மூன்று முறை வெற்றி பெற்று சாதனை படைத்த மு.க.ஸ்டாலின், இந்த முறை தோல்வியை சந்தித்தார். கொளத்தூரில் பதிவான வாக்குகள் 22 சுற்றுகளாக எண்ணப்பட்டன. வாக்கு எண்ணிக்கையின் முடிவில் மு.க.ஸ்டாலின் சுமார் 9 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

மு.க.ஸ்டாலின் அரசியல் பயணம்

1968ம் ஆண்டு சென்னை கோபாலபுரத்தில் தி.மு.க. இளைஞரணியை மு.க.ஸ்டாலின் தொடங்கினார். 40 ஆண்டுகளுக்கும் மேலாக இளைஞரணி செயலாளராக இருந்த அவர், 1996ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மேயராக பொறுப்பேற்றார். 20062011 வரை உள்ளாட்சி துறை அமைச்சராகவும்,

அதில், 2009ம் ஆண்டு முதல் துணை முதல் அமைச்சராகவும் இருந்தார். 2021ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்ற நிலையில், முதல் அமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றார்.

தேர்தல் வரலாறு

1984 ஆயிரம் விளக்கு தோல்வி

1989 ஆயிரம் விளக்கு வெற்றி

1991 ஆயிரம் விளக்கு தோல்வி

1996 ஆயிரம் விளக்கு வெற்றி

2011 கொளத்தூர் வெற்றி

2016 கொளத்தூர் வெற்றி

2021 கொளத்தூர் வெற்றி

2026 கொளத்தூர் தோல்வி

## திருப்பூர் மாவட்டத்தில் நடந்த சட்டமன்ற தேர்தலில்

# 8 தொகுதிகளிலும் பதிவான வாக்குகள் 4 அடுக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு உள்ளே செல்லக்கூடிய முகவர்கள் பலத்த சோதனைக்கு பின்னரே வாக்கு எண்ணிக்கை மையத்திற்குள் அனுப்பப்படுகின்றன

திருப்பூர்மாவட்டத்தில் சட்டமன்ற தேர்தல் பதிவான வாக்குகள் இன்று எல் ஆர் ஜி அரசினர் மகளிர் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில் எண்ணப்படுகிறது. இதனை முன்னிட்டு 4 அடுக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

திருப்பூர்மாவட்டத்தில் திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, அவினாசி (தனி), தாராபுரம் (தனி),உடுமலை, மடத்துக்குளம், காங்கேயம், பல்லடம் ஆகிய 8 தொகுதிகள் உள்ளது. இந்த 8 தொகுதிகளிலும் மாவட்டம் முழுவதும் 116 போர் போட்டியிடுள்ளனர். திருப்பூர் வடக்கு, பல்லடம், காங்கயம் தொகுதிகளில் தலா 15 வேட்பாளர்கள், திருப்பூர் தெற்கு தொகுதியில் 24 வேட்பாளர்கள், அவினாசியில் 14, மடத்துக்குளத்தில் 13, உடுமலையில் 11, தாராபுரத்தில் 9 பேர் அடங்குவர். கடந்த 23ம் தேதி மாவட்டம் முழுவதும் வாக்குப்பதிவு மும்முரமாக நடைபெற்றது.

8 சட்டமன்ற தொகுதிகளில் 17 லட்சத்து 56 ஆயிரத்து 109 வாக்காளர்கள் வாக்களித்தனர். பதிவான வாக்குகள்அடங்கிய வாக்குப்பதிவு எந்திரங்கள் அனைத்தும் வாக்கு எண்ணும் மையமான எல். ஆர்.ஜி. கல்லூரியில் தொகுதி வாரியாக பிரித்து வைக்கப்பட்டுள்ளன. இன்று வாக்குப்பதிவு எந்திரங்கள் திறந்து எண்ணப்பட உள்ளன.

வாக்குப்பதிவு இயந்திரத்திற்கு 408 அலுவலர்கள்இ தபால் வாக்கு எண்ணும் பணிக்கு 160 அலுவலர்கள் மற்றும் நுண் பார்வையாளர்கள், கண்காணிப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள் என மொத்தமாக 568 பணியாளர்கள் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட உள்ளனர். இதற்கிடையே வாக்குகள் எண்ணுவதற்கு 14 டேபிள்கள் வீதம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி மாவட்டம் முழுவதும் 8 தொகுதிகளிலும் 204 சுற்றுகளாக வாக்கு எண்ணிக்கை நடைபெற இருக்கிறது. தாராபுரம் தொகுதி 23 சுற்றுகளாக எண்ணப்படுகிறது.

இதுபோல் காங்கேயம் தொகுதி 23 சுற்றுகளாகவும், அவினாசி தொகுதி 27 சுற்றுகளாகவும், திருப்பூர் வடக்கு தொகுதி 32 சுற்றுகளாகவும் எண்ணப்பட உள்ளன.

இதுபோல் தெற்கு தொகுதி 21 சுற்றுகளாகவும், பல்லடம் தொகுதி 35 சுற்றுகளாகவும், உடுமலை தொகுதி 22 சுற்றுகளாகவும், மடத்துக்குளம் தொகுதி 21 சுற்றுகளாவும் எண்ணப்பட உள்ளன. வாக்கு எண்ணும் மையத்தில் 4 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு பாதுகாப்பு பணி நடந்து வருகிறது. 260 சிசிடிவி கேமராக்கள் மூலம் முழுவதும் கண்காணிக்கப்படுகிறது, இந்நிலையில் வாக்குகள் எண்ணுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளது. வாக்கு எண்ணும் மையத்தில் ஊடக அறை, கண்காணிப்பு அறை, நுண் பார்வையாளர்கள், தேர்தல் பார்வையாளர்கள் அறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

இதுபோல் வாக்கு எண்ணிக்கையை அறிந்து கொள்ள அரசியல் கட்சியினர் மற்றும் வேட்பாளர்களால் நியமிக்கப்பட்டுள்ள பூத் ஏஜெண்டுகளுக்கு பதிவான வாக்குகளை காண்பிக்கவும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இதற்காக இரும்பு கம்பிகளால் தடுப்புகளும் அமைக்கப்பட்டுள்ளன. இன்று காலை5மணிக்குதேர்தல் பணியில் ஈடுபடுகிற அனைவரும்வருகை தந்துள்ளனர், இதற்கிடையே இன்று காலையில் முதலாவதாக தபால் வாக்குகள் 8 மணிக்கு எண்ணப்பட உள்ளன. 8 தொகுதிகளிலும் 16 ஆயிரத்து 800 வாக்குகள் பதிவாகி உள்ளது. இதனால் 500 வாக்குகளுக்கு ஒரு டேபிள் என கணக்கிட்டு தொகுதி வாரியாக தபால் வாக்குகள் எண்ண டேபிள்களும் அமைக்கப்பட்டுள்ளன. தபால் வாக்குகள் எண்ணப்பட்ட பிறகு அடுத்த 30 நிமிடத்திற்கு பிறகு வாக்குப்பதிவு எந்திரங்களில் பதிவான வாக்குகள் திறந்து தொகுதி வாரியாக எண்ணப்பட உள்ளன.

4அடுக்கு போலீஸ் பாதுகாப்பு ஏற்கனவே போடப்பட்ட நிலையில், அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நிகழாமல் இருக்க கூடுதலாக போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட இருக்கிறார்கள். முகவர்களுக்கு தனித்தனியாக ஐ.டி கார்டுகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் கியூ ஆர் கோடும் உள்ளது. இதனை ஸ்கேன் செய்து முகவர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். ஐ.டி. கார்டுகள் இல்லாமல் இருப்பவர்கள் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபோல் வாக்கு எண்ணும் மையத்திற்கு வெளியே 100 மீட்டருக்கு உள் பகுதியில் யாரும் அனுமதிக்கப்படவில்லை. வாக்கு எண்ணிக்கையை முன்னிட்டு 1000க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார். இதுதவிர மத்திய பாதுகாப்பு படை போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள். வாக்கு எண்ணும் மையம் போலீஸ் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இதுபோல் டிரோன்கள் பறக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.



# திருச்சி மேற்கு தொகுதியில் கே.என்.நேரு வெற்றி

திருச்சி, மே. 5

தமிழக தேர்தல் முடிவுகள் இன்று (மே 4) வெளியாகி வருகிறது. காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கியுள்ள நிலையில் வாக்குகள் விறுவிறுப்பாக எண்ணப்பட்டு வருகின்றன. இதனிடையே, திருச்சி மேற்கு தொகுதியில் திமுக அமைச்சர் 4000 வாக்குகள் வித்தியாசத்தில் கே.என்.நேரு வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



திருச்சி கிழக்குதொகுதி வாக்கு என்னும் பணி

## சாயல்குடியில்

# வெறிநாய் கடித்து 3 ஆடுகள் பலி

இராமநாதபுரம்,மே 5

இராமநாதபுரம் மாவட்டம்சாயல்குடி உரைக்கிணறு பகுதியைச் சேர்ந்த அன்னப்பூ நாடார் மகன் ஆத்திராஜ் என்பவர், சாயல்குடி தூத்துக்குடி கிழக்குகடற்கரை சாலையில் மரக்கடை நடத்தி வருகிறார். கடையைச் சுற்றிதகரவேலிஅமைத்து, அதற்குள் மூன்று வெள்ளாடுகளை பாதுகாப்பாக வளர்த்து வந்தார்.இந்நிலையில், நேற்று இரவு கடையை மூடி சென்ற நிலையில், நேற்று காலை வந்தபோது அதிர்ச்சிசம்பவம் காத்திருந்தது. இரவு நேரத்தில் தகர வேலியை தரையில் குடைந்து உடைத்து உள்ளே நுழைந்தவெறிநாய்கள், மூன்று ஆடுகளையும் கடித்து குதறி குடல் வெளியேறி இறந்த நிலையில் கிடந்த ஆடுகளை பார்த்த உரிமையாளர் அதிர்ச்சி அடைந்தார். இந்தசம்பவத்தை பார்த்த பொதுமக்கள் பாதுகாப்பாக வளர்த்து வந்த ஆடுகளுக்கே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதேபோல் குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் மீது வெறிநாய்கள் தாக்குதல் நடத்தும் அபாயம் உள்ளது. அதற்கு முன்பாகவே பேரூராட்சி நிர்வாகம் உடனடியாகநடவடிக்கை எடுத்து வெறிநாய்களை கட்டுப்படுத்த வேண்டும் எனவும், உயிரிழந்த ஆடுகளுக்கானஇழப்பீட்டை வருவாய் துறை மூலம் வழங்க வேண்டும் என்றும் அவர்கள் புகாரில் வலியுறுத்தியுள்ளனர்.

பல மாதங்களாக சாயல்குடி பகுதிகளில் வெறிநாய்கள் அதிகரித்து வருவதை கட்டுப்படுத்த கோரி பலமுறை மாவட்ட ஆட்சியர் க்கு கோரிக்கை மனுகொடுத்துள்ளனர்.



தருமபுரி சட்டமன்ற தொகுதியின் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிட்ட பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி வெற்றி பெற்றார்.

தேமுதிக 56,905

பாமக 93,703

தவெக72,817

நாதக 6,558

தொடர்ந்து நடைபெற்ற 23 வது சுற்று முடிவில் பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி 20,778 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

## கன்னியாகுமரியில்

# பூட்டிய வீட்டை உடைத்து 13 பவுன் நகை, ரூ.12 லட்சம் கொள்ளை

கன்னியாகுமரி, மே. 5

கன்னியாகுமரி, சுவாமிநாதபுரம் பகுதியை சேர்ந்தவர் பொன்னையா. இவர் சிங்கப்பூரில் வேலையில் உள்ளார். இவரது மனைவி முத்துலட்சுமி (52). இந்த தம்பதிக்கு 2 மகன்கள் உள்ளனர். மூத்த மகன் ரவீன் (28) துபாயில் பணிபுரிந்து வருகிறார். 2 வது மகன் லெமீஸ் (24) ஹைதராபாத்தில் உள்ள ஒரு கல்லூரியில் படித்து வருகிறார். இதனால் முத்து லட்சுமி மட்டும் வீட்டில் தனியாக வசித்து வருகிறார். இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு முத்துலட்சுமி வீட்டை பூட்டிவிட்டு வடக்கன் குளம் பகுதியில் உள்ள கோவில் கொடை விழாவை காண சென்றுள்ளார். இதையடுத்து கடந்த 1ம் தேதி அவர் மீண்டும் கன்னியாகுமரியில் உள்ள வீட்டிற்கு வந்துள்ளார். பின்னர் முன்பக்க கதவை திறந்து உள்ளே சென்று பார்த்த போது, வீட்டின் பின்பக்க கதவு பூட்டு உடைக்கப்பட்டு திறந்து கிடந்தது. இதை அடுத்து வீட்டில் உள்ளே பார்த்தபோது பீரோவில் வைக்கப்பட்டிருந்த 13 பவுன் தங்க நகைகள் மற்றும் ரொக்கம் ரூ.12 லட்சம் ஆகியவை கொள்ளை அடிக்கப்பட்டிருந்தது. முத்துலட்சுமி வீட்டை பூட்டிவிட்டு வெளியூருக்கு சென்றதை யாரோ மர்ம நபர்கள் அறிந்து வீட்டின் பின்பக்க கதவு உடைத்து உள்ளே புகுந்து நகை பணத்தை கொள்ளையடித்து சென்றது தெரியவந்துள்ளது. இது குறித்து கன்னியாகுமரி போலீசருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்தில் சென்று பார்வையிட்டு அந்த தெருவில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்து விசாரித்து வருகின்றனர். மேலும் தடயவியல் நிபுணர்கள், போலீஸ் மோப்ப நாய் அழைத்துவரப்பட்டு துப்பு துலக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் குறித்து முத்துலட்சுமி அளித்த புகாரின் பேரில் கன்னியாகுமரி போலீசார் வழக்கு போல் செய்து விசாரித்து வருகின்றனர்.

# டெல்லியில் 10 ஆண்டுகளுக்கு முன்பு கெஜ்ரிவால் செய்ததை தமிழகத்தில் செய்து காட்டிய விஜய்

சென்னை,

தமிழகத்தில் 234 சட்டசபை தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் 23ந்தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தேர்தலில் 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 வாக்காளர்கள் ஓட்டு போட தகுதி பெற்றிருந்தனர். மொத்தம் 85.10 சதவீத வாக்குகள் பதிவாகின.

அதில் 4 கோடியே 87 லட்சத்து 99 ஆயிரத்து 885 வாக்குகள் ஈ.வி.எம். எந்திரம் மூலமாகவும், தபால் வாக்குகளாக 5 லட்சத்து 80 ஆயிரத்து 384 ம் பதிவாகி இருந்தன. தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று காலை 8 மணி முதல் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது வரை விஜய்யின்தமிழகவெற்றிக் கழகம் தற்போது வரை 107 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. இந்த தேர்தலில் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டியிட்ட த.வெ.க. தலைவர் விஜய், 2 தொகுதிகளிலும் அபார வெற்றி பெற்றுள்ளார்.

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் கட்சி, முதல் முறையாக தேர்தலில் போட்டியிட்டு வரலாற்று வெற்றியை பதிவு செய்துள்ளது. இந்நிலையில், 10 ஆண்டுகளுக்கு முன்பு டெல்லியில் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சி செய்து காட்டியதை தற்போது தமிழகத்தில் விஜய் செய்துள்ளார் என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

தமிழகத்தில் சுமார் அரை நூற்றாண்டு காலமாக நீடித்து வந்த தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய திராவிட கட்சிகளின் ஆதிக்கத்தை இன்று விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் முறியடித்துள்ளது. இதேபோல், டெல்லியில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகளின் ஆதிக்கத்திற்கு முடிவு கட்டிவிட்டு ஆம் ஆத்மி கட்சி ஆட்சிக்கு வந்தது.

ஆம் ஆத்மி கட்சி தொடங்கப்பட்ட ஓராண்டுக்குப் பிறகு, 2013ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த தேர்தலில்முதல்முறையாக போட்டியிட்டது. பின்னர் 2015சட்டமன்ற தேர்தலில் மிகப்பெரிய பெரும்பான்மையுடன் ஆம் ஆத்மி கட்சி அபார வெற்றி பெற்றது.

அங்கு நிலவிய மும்முனைப் போட்டியில், டெல்லியில் மொத்தம் உள்ள 70 சட்டமன்ற தொகுதிகளில் 67ல் ஆம் ஆத்மி கட்சி வெற்றி பெற்றது. பா.ஜ.க. வெறும் 3 இடங்களை பெற்ற நிலையில், காங்கிரஸ் எந்த தொகுதியிலும் வெற்றி பெறவில்லை. டெல்லியின் முதல் மந்திரியான கெஜ்ரிவால், 2024 செப்டம்பர் வரை அந்த பதவியில் இருந்தார்.

2010 காலகட்டங்களில் இந்தியா முழுவதும் பரவிய தீவிர ஊழல் எதிர்ப்பு இயக்கத்தில்தான் கெஜ்ரிவாலின் எழுச்சி வேரூன்றியிருந்தது. அந்த இயக்கம், மாற்று அரசியல் வாக்குறுதிகளின் அடிப்படையில் ஆம் ஆத்மி கட்சியை உருவாக்கி, சாமானிய மக்களின் நலனுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் எழுச்சி பெற்றது. கெஜ்ரிவாலைப்போலவே, விஜய்யும் ஊழல் மற்றும் குடும்ப அரசியலுக்கு, குறிப்பாக பாரம்பரிய அரசியலுக்கு எதிராக போராடுவதாக சபதம் எடுத்து, சட்டமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்து ஒரு பெரும் சவாலை மேற்கொண்டார்.

பாரம்பரிய அரசியலில் இருந்து முழுமையாக விலகுவதாகக் கூறிக்கொண்டாலும், இந்த இரு தலைவர்களும் இலவசங்களை வழங்குவதைத் தங்களது தேர்தல் உத்தியாக பயன்படுத்தியுள்ளனர். பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.2,500 உதவித்தொகை, ஒவ்வொரு வீட்டிற்கும் 6 இலவச எல்.பி.ஜி. சிலிண்டர்கள், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மணப்பெண்களுக்கு 8 கிராம் தங்கம் மற்றும் பட்டுச் சேலை, வேலையில்லாத பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் ரூ.4,000 ஆதரவு மற்றும் பல்வேறு இதர வசதிகளை வழங்குவதாக விஜய் உறுதியளித்துள்ளார்.

இதேபோல்,கெஜ்ரிவால் அளித்த வாக்குறுதிகளான இலவச மின்சாரம், தண்ணீர், பெண்களுக்கான பேருந்து பயணம், முதியோருக்கான புனித யாத்திரை, சுகாதார வசதிகள் மற்றும் கல்வி ஆகியவை அவரது வெற்றிக்கான முக்கிய அம்சங்களாக அமைந்தன.

விஜய் மற்றும் கெஜ்ரிவால் ஆகிய இருவரும் ஒன்றுமில்லாத நிலையில் இருந்து கட்சியை தொடங்கி, மாபெரும் வெற்றியை பெற்றுள்ளனர். தமிழகத்தைப் பொறுத்தவரை திராவிட அரசியலில் உருவாகி இருக்கும் இந்த மாபெரும் மாற்றம்,10ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த ஆம் ஆத்மியின் எழுச்சியை ஒத்திருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.



தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும்அதிமுகவேட்பாளர்கே.பி.அன்பழகன் 23வதுசுற்றுமுடிவில்37,402வாக்குகள்வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.



திருச்சிஜமால் முகமது கல்லூரியில் தபால் வாக்குகள் என்னும் பணி தொடங்கியது

# தபால் வாக்குகளில் திமுக முன்னிலை; திருச்சி கிழக்கில் விஜய் பின்னடைவு:திருச்சி மேற்கில் கே,என் .நேரு பின்னடைவு

தமிழ்நாடு 17ஆவது சட்டமன்றத்தின் பொதுத்தேர்தல் ஏப்ரல் 23 அன்று 234 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக நடைபெற்றது. இதில் 85.1% வாக்குகள் பதிவாகி சாதனை படைத்த நிலையில் வாக்கு எண்ணிக்கை இன்று காலை துவங்கியது. முதற்கட்டமாக தபால் வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. திருச்சியில் இரண்டு வாக்கு எண்ணும் மையங்கள்: டிவிஎஸ் டோல்கேட் அருகே உள்ள ஜமால் முகமது கல்லூரியில் திருச்சி கிழக்கு, திருச்சி மேற்கு, ஸ்ரீரங்கம், திருவெறும்பூர், மணப்பாறை உள்ளிட்ட ஐந்து தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. அதேபோல் புலிவலம் அருகே உள்ள தனியார் கல்லூரியில் மணச்சநல்லூர், முசிறி, துறையூர், லால்குடி தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கை தொடங்கி இருக்கிறது.

தபால் வாக்கு நிலவரப்படி திமுக 11 தொகுதிகளிலும், அதிமுக இரண்டு தொகுதிகளிலும், தவெக ஒரு தொகுதியிலும் முன்னிலை பெற்று இருக்கிறது.

திருச்சி மாவட்டத்தை பொறுத்தவரை தபால் வாக்குகளில் திமுக முன்னிலை பெற்று வருகிறது.

திருச்சி மேற்கு9106 வாக்குகள் பெற்று தவெக முன்னிலை. தபால் வாக்கில் அமைச்சர் நேரு பின்னடைவு.

துறையூர் காங்கிரஸ் முன்னிலை

லால்குடி பாரிவள்ளல் திமுக முன்னிலை

மண்ணச்சநல்லூர் கதிரவன் திமுக முன்னிலை

முசிறி யோகநாதன் அதிமுக முன்னிலை

திருச்சி கிழக்கு தொகுதியில் ஜோசப் விஜய் பின்னடைவு

தமிழகத்தைப் பொறுத்தவரை, மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் போட்டியிட்டுள்ளனர். மொத்தம் 5.73 கோடி வாக்காளர்களில் 4.88 கோடி பேர் வாக்களித்தனர்.

மொத்தம் 75,064 வாக்குச்சாவடிகளில், 1,06,408 வாக்குப்பதிவு இயந்திரங்கள், தலா 75,064 கட்டுப்பாட்டு இயந்திரங்கள் மற்றும் விவிபாட் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

வாக்குப் பதிவு முடிந்ததும் அவை அனைத்தும் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 62 வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு சென்று பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் களத்தில் இந்தமுறை 4 முனைப் போட்டி நிலவியது. புதிதாக தேர்தல் களம் கண்ட விஜய்யின் தவெக, இந்தத் தேர்தலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



தருமபுரி மாவட்டம் அரூர் (தனி) சட்டமன்ற தொகுதியின் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் சம்பத்குமார் 74,063 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார்.

# நாகை: விஜய் முகம் பொறித்த சட்டை அணிந்து வந்த தவெக முகவர் வெளியேற்றம்

நாகை, மே. 5

தமிழகத்தில்உள்ள234சட்டசபைதொகுதிகளுக்கும் கடந்த 23ந்தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. நாகை மாவட்டத்தில் உள்ள நாகப்பட்டினம், கீழ்வேளூர், வேளாங்கண்ணி ஆகிய 3 சட்டசபை தொகுதிகளில் வாக்குப்பதிவு நடந்தது. இவ்வாறு 3 சட்டசபை தொகுதிகளில் பதிவான வாக்குகள் மே 4ந் தேதி (திங்கட் கிழமை) காலை 8 மணிக்கு எண்ணப்படுகின்றன. நாகை சட்டசபை தொகுதியில் பதிவான வாக்குகள் நாகை கலை கல்லூரியின் முதல் தளத்திலும், கீழ்வேளூர் சட்டசபை தொகுதியில் பதிவானவாக்குகள்முதல்தளத்திலும், வேதாரண்யம் சட்டசபை தொகுதியில் பதிவான வாக்குகள் இரண்டாம் தளத்திலும் வைக்கப்பட்டுள்ளது. நாகை சட்டசபை தொகுதியில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்கு 14 மேஜைகள் போடப்பட்டுள்ளது. இதில்பதிவானவாக்குகள்18சுற்றுகளாகஎண்ணப்பட உள்ளது.

கீழ்வேளூர் சட்டசபை தொகுதிக்கு 16 மேஜைகள் போடப்பட்டுள்ளது. இங்கு பதிவான வாக்குகள் 14 சுற்றுகளாக எண்ணப்படுகிறது. வேதாரண்யம் சட்டசபை தொகுதியில் பதிவான வாக்குகளை எண்ண 14 மேஜைகள் போடப்பட்டுள்ளது. எனவே



இந்த தொகுதியில் பதிவான வாக்குகள் 18 சுற்றுகளாக எண்ணப்படவுள்ளது. எனவே 3 சட்டசபை தொகுதிகளில் பதிவான வாக்குகள் 50 சுற்றுகளாக எண்ணப்படவுள்ளது. இந்த நிலையில், நாகை மாவட்டம் புத்தூர் பகுதியில் உள்ள வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு விஜய் முகம் பொறித்த சட்டை அணிந்து வந்த தவெக முகவர் வெளியேற்றப்பட்டார். உடையை மாற்றிவிட்டு வருமாறு போலீசார் அறிவுறுத்தி உள்ளனர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# ஒரு கோடிக்கும் அதிகமான வாக்குகளை கடந்து த.வெ.க. சாதனை

சென்னை, மே 5

தமிழகத்தில் 234 சட்டசபை தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் 23ந்தேதி ஒரேகட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தேர்தலில் 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 வாக்காளர்கள் ஓட்டு போட தகுதி பெற்றிருந்தனர். மொத்தம் 85.10 சதவீத வாக்குகள் பதிவாகின.

அதில் 4 கோடியே 87 லட்சத்து 99 ஆயிரத்து 885 வாக்குகள் ஈ.வி.எம். எந்திரம் மூலமாகவும், தபால் வாக்குகளாக 5 லட்சத்து 80 ஆயிரத்து 384ம் பதிவாகி இருந்தன. தேர்தலில் பதிவான வாக்குகள் மே 4ந் தேதி காலை 8 மணி முதல் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது வரை விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் 107 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. த.வெ.க. தலைவர் விஜய் போட்டியிட்ட பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளார்.

இந்நிலையில், தமிழக வெற்றிக் கழகம் ஒரு கோடி வாக்குகளை கடந்து சாதனை படைத்துள்ளது. மே 4ந் தேதி மாலை 3 மணி நிலவரப்படி, த.வெ.க. 1 கோடியே 9 லட்சம் வாக்குகளை பெற்றுள்ளது. இது 22.54 சதவீதமாகும். தொடர்ந்து, தி.மு.க. 71.97 லட்சம் வாக்குகளுடன் 2வது இடத்திலும், அ.தி.மு.க. 66.53 லட்சம் வாக்குகளுடன் 3வது இடத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# மதுரை: மேலூர் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி

மதுரை, மே 5

தமிழகத்தில் 234 சட்டசபை தொகுதிகளுக்கான தேர்தல் கடந்த மாதம் (ஏப்ரல்) 23ந் தேதி ஒரே கட்டமாக நடந்தது. தேர்தலில் பதிவான வாக்குகள் மே 4ந்தேதி காலை 8 மணியில் இருந்து எண்ணப்பட்டு வருகின்றன. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. இதைத் தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன.

தற்போதைய நிலவரப்படி, 109 தொகுதிகளில் தவெக முன்னிலையில் உள்ளது. அதிமுக 67 தொகுதிகளிலும், திமுக 58 தொகுதிகளிலும் முன்னிலை வகித்து வருகிறது. தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை நடந்து வருகிறது.

இந்த நிலையில், மதுரை மேலூர் தொகுதியில் காங்கிரஸ்வேட்பாளர்விஸ்வநாதன்60,080வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அவரை எதிர்த்து போட்டியிட்ட தவெக வேட்பாளர் மதுரை வீரனை



விட (மொத்த வாக்கு 57,361) 2,719 வாக்குகள் கூடுதலாக பெற்று காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார். அதிமுக வேட்பாளர் பெரியபுள்ளான் (எ) செல்வம் 56,744 வாக்குகள் பெற்று 3ம் இடத்தில் உள்ளார். நாதக வேட்பாளர் கோட்டை குமார் 9,570 வாக்குகள் பெற்று 4ம் இடத்தில் உள்ளார்.

# ராதாபுரம் தொகுதியில் போட்டியிட்ட சபாநாயகர் அப்பாவு தோல்வி

நெல்லை, , மே 5

தமிழகத்தில் 234 சட்டசபை தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் 23ந்தேதி ஒரேகட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தேர்தலில் 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 வாக்காளர்கள் ஓட்டு போட தகுதி பெற்றிருந்தனர். மொத்தம் 85.10 சதவீத வாக்குகள் பதிவாகின.

தேர்தலில் பதிவான வாக்குகள் மே 4ந் தேதி காலை 8 மணி முதல் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. தற்போது வரை விஜய்யின்தமிழக வெற்றிக்கழகம் 107 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. த.வெ.க. தலைவர் விஜய் போட்டியிட்ட பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளார்.

இந்நிலையில், நெல்லை மாவட்டம் ராதாபுரம் தொகுதியில், இதுவரை நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையின் முடிவில் த.வெ.க. வேட்பாளர் சதீஷ் கிறிஸ்டோபர் 69,556 வாக்குகள் பெற்று, 12,216 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியை உறுதி



செய்துள்ளார். அதே சமயம், ராதாபுரம் தொகுதியில் போட்டியிட்டசபாநாயகர்அப்பாவு57,340வாக்குகள் பெற்று தோல்வி அடைந்துள்ளார்.

இந்த தொகுதியில் பா.ஜ.க. சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் பாலகிருஷ்ணன் 52,084 வாக்குகளும், நாம் தமிழர் வேட்பாளர் கிரிஜா தாமரைப்பாண்டியன் 15,272 வாக்குகளும் பெற்று தோல்வி அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுரை தெற்கு தொகுதி: தவெக வேட்பாளர் கோபிசன் வெற்றி

மதுரை மே 5

தமிழக சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றது. பல்வேறு தொகுதிகளில் வெற்றி விவரங்கள் தெரியத்தொடங்கியுள்ளது. அந்த வகையில், மதுரை தெற்கு தொகுதியில்தவெகவெற்றிபெற்றுள்ளது. தவெக வேட்பாளர் கோபிசன் 58,598 வாக்குகள் பெற்று வென்றுள்ளார்.

திமுகசார்பாகபோட்டியிட்டபூமிநாதன் 38,542 வாக்குகள் பெற்று இரண்டாம்



இடத்தில் உள்ளார். பாஜக சார்பாக போட்டியிட்ட ராம சீனிவாசன் 29,489 வாக்குகளும் , நாம் தமிழர் கட்சியின் சுமதி 5,497 வாக்குகளும் பெற்றுள்ளனர். தவெக தொடர்ந்து பல்வேறுதொகுதிகளிலும்முன்னிலை வகித்து வருகிறது. தற்போதய நிலவரப்படிதவெக110இடங்களிலும் திமுக 65 இடங்களிலும் அதிமுக 59 இடங்களிலும் முன்னிலை வகிக்கிறது.

# தென்கொரியாவில் தூக்க போட்டியில் பரிசை தட்டி சென்ற 80 வயது தாத்தா

தென் கொரியா, மே. 5

தென் கொரியாவில் அதிகரித்து வரும் தூக்கமின்மையை போக்குவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக அந்நாட்டில் தூக்கப் போட்டி நடத்தப்பட்டது. தென் கொரிய தலைநகர் சியோலில் உள்ள ஹான் நதிக்கரையில் உள்ள யோயுடோ ஹாங்கங் பூங்காவில் தூங்குவதற்கான போட்டி மே 2 ல் நடந்தது.

இதன்படி, நன்றாக ஆழ்ந்து குட்டித் தூக்கம் போடும் நபர்களுக்கென போட்டி நடத்தி அதில் வெற்றி பெறுபவர்களுக்கு அரசு சார்பில் பரிசு வழங்கப்படுகின்றது. இந்நிகழ்வு 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. சியோல் மாநகராட்சியால் ஆண்டுதோறும் நடத்தப்படும், 'பவர் நேப்' என்ற இந்த போட்டியில் 170 பேர் கலந்துகொண்டனர். இந்தப் போட்டியில் கலந்து கொள்ள குறிப்பிடத்தக்க விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றது.

போட்டியில் வெற்றி பெறுவதற்கு கண்களை வெறுமனே மூடுவது மட்டும் போதாது. இதில், போட்டியாளர்கள் ஒவ்வொருவருக்கும் இதயத் துடிப்பைக் கணக்கிடும் கருவிகள் வழங்கப்படும். அதன்மூலம், இதயத் துடிப்பு எந்த அளவிற்கு



குறைந்து சீராக இருக்கிறது எனக் கணக்கிட்டு, குறிப்பிட்ட 2 மணி நேரத்திற்குள் ஆழ்ந்த தூங்குபவருக்கு அதற்கான மதிப்பெண் வழங்கப்படும். மேலும் பல தொந்தரவுகளை தாண்டி ஆழ்ந்த தூக்கத்தை தொடர்கிறவர்களே போட்டியின் வெற்றியாளராக தேர்ந்தெடுக்கப்படுகிறார். இப்போட்டியில், 80 வயது முதியவர் ஒருவர் முதலிடம் பிடித்து வெற்றி பெற்றார். இவருக்கு அடுத்ததாக, 37 வயதான அலுவலகப் பணிசெய்யும் நபர் ஒருவர் இரண்டாம் இடம்பிடித்துள்ளார். பல இளைஞர்கள் கலந்துகொண்ட நிலையில் 80 வயது முதியவர் ஒருவர் வெற்றி பெற்றுள்ளார்.

# ஜப்பானில் தொடரும் மக்கள் தொகை சரிவு: குழந்தைகள் எண்ணிக்கை 1.33 கோடியாக வீழ்ச்சி

ஜப்பான், மே. 5

ஜப்பானில் குழந்தைகளின் எண்ணிக்கை தொடர்ந்து 45வது ஆண்டாக சரிவைச் சந்தித்துள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. இன்று (மே 5) ஜப்பானில் 'குழந்தைகள் தினம்' கொண்டாடப்படும் நிலையில், அந்நாட்டு உள்விவகார அமைச்சகம் இந்த புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளது. 14 வயது அல்லது அதற்குக் குறைவானவயதுடையகுழந்தைகளின்எண்ணிக்கை 1.329கோடியாக(13.29மில்லியன்)குறைந்துள்ளது. இதுகடந்தஆண்டைவிட3.50லட்சம்குறைவாகும். மொத்த குழந்தைகளில் சிறுவர்கள் 68.1 லட்சம் பேரும், சிறுமியர் 64.8 லட்சம் பேரும் உள்ளனர். 12 14 வயதுடையவர்கள் 30.9 லட்சம் பேர். 0 2 வயதுடையவர்கள் வெறும் 21.3 லட்சம் பேர் மட்டுமே உள்ளனர். இது ஜப்பானில் பிறப்பு விகிதம்



மிகமோசமாகப்பாதிக்கப்பட்டுள்ளதைகாட்டுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் 2025ஆம் ஆண்டு உலக மக்கள் தொகை வாய்ப்பு அறிக்கையின்படி, 4 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நாடுகளில், தென்கொரியாவிற்கு (10.2%) அடுத்தபடியாக, ஜப்பான் (10.8%) மிகக் குறைந்த குழந்தைகளைக் கொண்ட நாடாகத் திகழ்கிறது.

# தூத்துக்குடி: கொலை வழக்கில் 2 பேர் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தில் கைது

தூத்துக்குடி, மே.5

தூத்துக்குடி வடபாகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் நடந்த கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்ட தூத்துக்குடியை சேர்ந்த டிக்சன்(எ) சுல்தான் (வயது 23) மற்றும் இருதயஜாஸ்பர்(28) ஆகிய 2 பேர் மீதும் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு வடபாகம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர், மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன்பேரில் தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. மதன் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் விஷூ மகாஜன் உத்தரவின் பேரில் மேற்சொன்ன 2 பேரையும் நேற்று வடபாகம் காவல் நிலைய போலீசார் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைத்தனர்.

# தர்மபுரியில் மாடு மேய்க்க சென்ற விவசாயி யானை தாக்கி பலி

தர்மபுரி , மே 5

தர்மபுரி மாவட்டம் ஏரியூர் அருகே உள்ள நாகமரை ஊராட்சி ஏமனூரை சேர்ந்த காத்தப்பன் (வயது 60), விவசாயி. இவர் மாடுகள் வளர்த்து வந்தார். இவர் நேற்று முன்தினம் ஏமனூர் வனப்பகுதியில் மாடு மேய்க்க சென்றார். இரவு நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை.

இதனால் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அவரை வனப்பகுதிக்கு சென்று தேடியும் காணவில்லை. ஆனால் மாடுகள் மட்டும் வீட்டுக்கு வந்தன. இந்த நிலையில் நேற்று காத்தப்பனின் குடும்பத்தினர் வனப்பகுதிக்கு சென்று அவரை தேடினர். அப்போது வனப்பகுதியில் காத்தப்பன் யானை தாக்கியதில் உடலில் பலத்த ரத்தக்காயங்களுடன் பிணமாக கிடந்தது தெரியவந்தது. இதுகுறித்து ஏரியூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று காத்தப்பனின் உடலை கைப்பற்றி பென்னாகரம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# லாரியில் கடத்தி வந்த ரூ.20 லட்சம் மதிப்புள்ள குட்கா பறிமுதல்

தூத்துக்குடி, மே. 5

தூத்துக்குடி மாவட்டத்தில் சட்டவிரோத போதைப்பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தலை கட்டுப்படுத்தும்வகையில்மாவட்டபோலீஸ்சூப்பிரண்டு மதன் உத்தரவின் பேரில் போலீசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றனர்.இந்நிலையில்சாத்தான்குளம் போலீஸ் சரகத்துக்கு உட்பட்ட பகுதியில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலைகளை ஏற்றிக்கொண்டு வாகனம் செல்வதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் தனிப்படை சப் இன்ஸ்பெக்டர் முத்துராஜா தலைமையிலான போலீசார் கடத்தலை தடுக்க தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். இந்நிலையில் சாத்தான்குளம் போலீஸ் சரகத்திற்கு உட்பட்ட பகுதியில்சப்இன்ஸ்பெக்டர்முத்துராஜாமற்றும் சாத்தான்குளம் போலீசார் இணைந்து ரோந்து சென்றனர்.

அப்போது பேய்குளம் பகுதியில் சந்தேகத்திற்கு இடமாக வந்த லாரியை போலீசார் நிறுத்திய போது, அதனை ஓட்டி வந்த டிரைவர் மற்றும் வாகனத்தில் இருந்தவர்கள் கீழே இறங்கி ஓட்டம் பிடித்தனர். இதனைத் தொடர்ந்து போலீசார் லாரியில் ஏறி சோதனை நடத்திய போது, அதில் ரூ.20 லட்சம் மதிப்பிலான 450 கிலோ குட்கா புகையிலை மூட்டைகள் மற்றும் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைகள் இருந்தது. அதனை கைப்பற்றி பறிமுதல் செய்த போலீசார், தப்பி ஓடியவர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தூத்துக்குடி: கொலை வழக்கில் 2 பேர் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தில் கைது

தூத்துக்குடி, மே. 5

தூத்துக்குடி வடபாகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் நடந்த கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்ட தூத்துக்குடியை சேர்ந்த டிக்சன்(எ) சுல்தான் (வயது 23) மற்றும் இருதயஜாஸ்பர்(28) ஆகிய 2 பேர் மீதும் தமிழ்நாடு தடுப்புகாவல்சட்டத்தின்கீழ்நடவடிக்கைஎடுக்குமாறு வடபாகம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர், மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அதன்பேரில் தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. மதன் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் விஷ்ணு மகாஜன் உத்தரவின் பேரில் மேற்சொன்ன 2 பேரையும் நேற்று வடபாகம் காவல் நிலைய போலீசார் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைத்தனர்.

# “மாற்றத்தை விரும்பி தவெக மீது எதிர்பார்ப்புடன் வாக்களித்துள்ளனர்” மு.வீரபாண்டியன்



சென்னை, மே 5

‘மாற்றத்தை விரும்பிய வாக்காளர்கள் தமிழக வெற்றிக் கழகத்தின் மீது பெரும் எதிர்பார்ப்புடன் வாக்களித்துள்ளனர். அதேசமயம் வகுப்புவாத மதவெறி சக்திகளையும், இனவாத, சாதிய சக்திகளையும் மக்கள் நிராகரித்து உள்ளனர்’ என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகி வருகின்றன. தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் பெற்றதும், பதிவு பெற்றதுமான அரசியல் கட்சிகளும், தனிநபர்கள் சுயேட்சைகளாகவும் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களம் இறங்கினர்.

கடந்த23.04.2026ஆம்தேதிநடந்தவாக்குப்பதிவில், சிறப்பு தீவிர திருத்த முறையில் இறுதி செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களில் 85.10 சதவீத வாக்காளர்கள் பங்கேற்று தங்கள் ஜனநாயக கடமையை நிறைவேற்றினர். பதிவான வாக்குகள் எண்ணிக்கை இன்று (04.05.2026) காலையில் தொடங்கியது. முடிவுகள் வெளியாகி வருகின்றன.

மாற்றத்தை விரும்பிய வாக்காளர்கள் தமிழக வெற்றிக் கழகத்தின் மீது பெரும் எதிர்பார்ப்புடன் வாக்களித்துள்ளனர். அதேசமயம் வகுப்புவாத மதவெறி சக்திகளையும், இனவாத, சாதிய சக்திகளையும் மக்கள் நிராகரித்து உள்ளனர். தமிழக மக்கள் வழங்கிய தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மதித்து ஏற்கிறது.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வாக்களித்த தமிழக மக்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி நன்றியை தெரிவித்துக் கொள்கிறது’ எனத் தெரிவித்துள்ளார்.

# திருவாடானையில் தமிழக வெற்றி கழகம் வெற்றி



திருவாடனை சட்டமன்ற தொகுதியில்தமிழகவெற்றி கழகம் (தவெக) சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் ராஜுவ், 2,501 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவர் 69,287 வாக்குகள் பெற்றார். அதிமுக வேட்பாளர் கிருத்திகா முனியசாமி 63,716 வாக்குகளும், திமுக கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளர் கருமாணிக்கம் 66,786 வாக்குகளும் பெற்றனர். இந்த தேர்தல் முடிவுகள் திருவாடனை தொகுதியில் தவெகவின் வெற்றியை உறுதி செய்துள்ளன.



தருமபுரிமாவட்டம்பாப்பிரெட்டிப்பட்டிசட்டமன்ற தொகுதியின் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் மரகதம் வெற்றிவேல் ஒரு லட்சத்து 9 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

# தர்மபுரியில் மாடு மேய்க்க சென்ற விவசாயி யானை தாக்கி பலி

தர்மபுரி,

தர்மபுரி மாவட்டம் ஏரியூர் அருகே உள்ள நாகமரை ஊராட்சி ஏமனூரை சேர்ந்த காத்தப்பன் (வயது 60), விவசாயி. இவர் மாடுகள் வளர்த்து வந்தார். இவர் நேற்று முன்தினம் ஏமனூர் வனப்பகுதியில் மாடு மேய்க்க சென்றார். இரவு நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை.

இதனால் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அவரைவனப்பகுதிக்குசென்றுதேடியும்காணவில்லை. ஆனால் மாடுகள் மட்டும் வீட்டுக்கு வந்தன. இந்த நிலையில் நேற்று காத்தப்பனின் குடும்பத்தினர் வனப்பகுதிக்கு சென்று அவரை தேடினர். அப்போது வனப்பகுதியில் காத்தப்பன் யானை தாக்கியதில் உடலில்பலத்தரத்தக்காயங்களுடன்பிணமாககிடந்தது தெரியவந்தது.

இதுகுறித்து ஏரியூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று காத்தப்பனின் உடலை கைப்பற்றி பென்னாகரம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கூடலூர் தொகுதியில் திமுக வேட்பாளர் திராவிட மணி வெற்றி



தமிழக சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் மே 4ந் தேதி எண்ணப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் பல்வேறு தொகுதிகளில் வெற்றி விவரங்கள் தெரியத் தொடங்கியுள்ளது.

அந்த வகையில், நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியில் திமுக வேட்பாளர் திராவிட மணி வெற்றி பெற்றுள்ளார். திராவிட மணி 65,590 வாக்குகளை பெற்று 22,833 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். அதிமுக வேட்பாளர் பொன்.ஜெயசீலன் 42,757 வாக்குகளை பெற்று இரண்டாவது இடத்தை பிடித்துள்ளார். தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் தீபக் சாய் கிஷோர் 34,962 வாக்குகள் பெற்று மூன்றாவது இடத்தை பிடித்துள்ளார்.

தவெக தொடர்ந்து பல்வேறு தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது.

தற்போதயநிலவரப்படிதவெக111இடங்களிலும், திமுக 66 இடங்களிலும், அதிமுக 57 இடங்களிலும் முன்னிலை வகிக்கிறது.

# மக்களின் தீர்ப்பை தலைவணங்கி ஏற்கிறோம்: உதயநிதி ஸ்டாலின்

சென்னை, மே 5

உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: சேப்பாக்கம் தொகுதியில் என்னை 2வது முறையாக தேர்வு செய்த மக்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கி றேன். மக்கள் தீர்ப்பை தலைவணங்கி ஏற்றுக்கொள்கி றோம். நாளை சட்டமன்ற உறுப்பினர்களுடன் மு.க. ஸ்டாலின், துரைமுருகன் உள்ளிட்டோர் ஆலோசனை நடத்த உள்ளனர்.

ஸ்டாலின் வழியில் செயல்படுவோம். வெற்றிக்காக உழைத்த திமுகவினருக்கு நன்றி. மக்கள் ஒரு முடிவு எடுத்து இருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்கிறோம். வெற்றி பெற்ற எம்.எல்.ஏக்களுக்கும், புதிதாக பொறுப் பேற்க இருக்கும் அரசுக்கு வாழ்த்துகளையும் தெரி வித்து கொள்கிறோம்” என்றார்

## நாங்குநேரி தொகுதி:

# த.வெ.க. வேட்பாளர் ரெட்டியார்பட்டி நாராயணன் வெற்றி



சென்னை, மே 5

234 சட்டசபை தொகுதிகளில் பதிவான வாக்குகள் இன்று (திங்கட்கிழமை ) எண்ணப்பட்டு வருகின்றன. இதன் முடிவில் யார் அரியணையில் அமரப்போகிறார்கள் என்பது தெரியவரும். தற்போது நடைபெற்று வரும் தமிழக சட்டசபை தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் ஆரம்ப கட்டத்திலிருந்தே முன்னிலை வகித்து வருகிறது.

இந்நிலையில் 25 சுற்று வாக்கு எண்ணிக்கை முடிவில் நாங்குநேரி தொகுதி தவெக வேட்பாளர் ரெட்டியார்பட்டி நாராயணன் வெற்றி 16,419 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

இறுதி வாக்கு எண்ணிக்கை:

ரெட்டியார்பட்டி நாராயணன் (த.வெ.க.) 74,952 வாக்குகள்

ரூபி. மனோகரன் (தி.மு.க.) 58,533 வாக்குகள்

இசக்கி முத்து (அமமுக) 38,316

செல்வம் (நாதக) 17,618

# திராவிட மாடல் , துரத்தியடித்த மக்கள் ! : நடிகை கஸ்தூரி



சென்னை,

தமிழகசட்டப்பேரவைத்தேர்தல்வாக்குஎண்ணிக்கை காலை 8 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. தற்போதைய நிலவரப்படி தவெக 107, திமுக 75, அதிமுக 53 தொகுதிகளில் முன்னிலை வகிக்கின்றன. அதிமுக, திமுக மாறி மாறி 2ம் இடத்துக்கு போட்டாபோட்டி நிலவிய நிலையில் தற்போது திமுக 2ம் இடத்தில் உள்ளது.

சட்டமன்ற தேர்தலில் முன்னிலை பெற்றுள்ள விஜய்க்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. அந்த வகையில்,நடிகை கஸ்தூரி தவெக தலைவர் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்தார். இது தொடர்பாக தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தளபதி விஜய்க்கும், அவரது தமிழக வெற்றிக் கழகத்திற்கும் மற்றும் தமிழ்நாட்டு மக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள். தீயசக்தி திமுகவிற்கு டாடா. கருணாநிதியை விட ஸ்டாலின் ஆபத்தானவர். மன்னர் குடும்பத்துக்கு டாடா. மகன் மருமகன் ஸ்நேக் பாபு அட்ரோசிட்டிக்கு ஆப்பு.

திராவிட மாடல் , துரத்தியடித்த மக்கள் !

ஸ்டாலின் விலகட்டும், தமிழ்நாடு தப்பிக்கட்டும் !

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# “ஃபீனிக்ஸ் பறவை போல் அதிமுக மீளும்” எடப்பாடி பழனிசாமி



சென்னை மே 5

‘எம்.ஜி.ஆர், ஜெயலிதாவின் நல்லாசியுடன் ஃபீனிக்ஸ் பறவை போல்,அதிமுகமீண்டும்வெற்றிப் பாதைக்குத் திரும்பும்’ என அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘தமிழ்நாடு சட்டப்பேரவைப் பொதுத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்த, வாக்காளப் பெருமக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி. தமிழக சட்டமன்றத் தேர்தலில் எழுச்சியுடன் முன்வந்து ஜனநாயகக் கடமையாற்றிய அனைத்து மக்களுக்கும் எனது வணக்கத்தையும், நன்றியையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் தான் இங்கு நீதிபதிகள். மக்களுக்காகத் தான் ஆட்சி. எனவே, மக்கள் வழங்கிய முடிவை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். ஜெயலலிதாவின் வழியில், இந்தப் பின்னடைவில் இருந்து விரைவில் மீண்டு வருவோம்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்கு பிரச்சாரம் செய்த பிரதமர் நரேந்திர மோடிக்கும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கும், மத்திய அமைச்சர்களான பியூஷ் கோயல், ஜே.பி. நட்டா, பா.ஜ.க.தேசியத்தலைவர்நிதின்நபின்ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நம் கூட்டணியின் வெற்றிக்கு அயராது உழைத்த, கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களான, தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் நயினார் நாகேந்திரன், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அன்புமணி ராமதாஸ், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன், அக்கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட தொண்டர்களுக்கும்;

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி.கே. வாசன் , புதிய நீதிக் கட்சித் தலைவர் ஏ.சி.சண்முகம், இந்திய ஜனநாயகக் கட்சியின் நிறுவனர் பாரிவேந்தர், தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர் ஜான் பாண்டியன், புரட்சி பாரதம் கட்சித் தலைவர் பூவை ஜெகன்மூர்த்தி அவர்களுக்கும், கூட்டணிக்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, நமக்குநிபந்தனையின்றி பேராதரவு அளித்த கட்சிகள், அமைப்புகள் மற்றும் சங்கங்களின் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் ஆகியோருக்கும் நன்றி. நடந்து முடிந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்த, வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

எம்.ஜி.ஆர், ஜெயலிதா ஆகியோரின் நல்லாசியுடன் ஃபீனிக்ஸ் பறவை போல், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் வெற்றிப் பாதைக்குத்திரும்பும். “எனக்குப்பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும் அனைத்திந்திய அண்ணாதிராவிடமுன்னேற்றக்கழகம்மக்களுக்காகவே இயங்கும்'' என்று சூளுரைத்த ஜெயலலிதாவின் வார்த்தைகளை மெய்ப்பிக்கும் வகையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் பணியில் என்றென்றும் ஈடுபடும் என்பதை உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்.

# சுயேச்சைகள் யாரும் வெற்றி இல்லை

சென்னை, மே. 5

தமிழகத்தில் இதுவரை நடைபெற்ற தேர்தல்களில், சுயேச்சை வேட்பாளர்களும் வெற்றி பெற்று சட்டசபையை அலங்கரித்து வந்துள்ளனர். 1967ல் 6, 1971ல் 8, 1977ல் 1, 1980ல் 8, 1984ல் 4, 1989ல் 5, 1991ல் 1, 1996ல் 1, 2001ல் 3, 2006ல் 1 என்ற எண்ணிக்கையில் சுயேச்சை வேட்பாளர்கள் வெற்றி பெற்று வந்தனர்.

ஆனால், 2011, 2016ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல்களில், சுயேச்சை வேட்பாளர் ஒருவர்கூட வெற்றிபெறவில்லை. அதே நேரத்தில், 2016ம் ஆண்டு ஜெயலலிதா மறைவுக்கு பிறகு ஆர்.கே.நகர் தொகுதியில், சுயேச்சையாக போட்டியிட்டு டி.டி.வி. தினகரன் வெற்றி பெற்றார்.

சட்டசபையில் ஒரு சுயேச்சை எம்.எல்.ஏ. இருந்த நிலையில், கடந்த தேர்தலில் (2021) சுயேச்சை வேட்பாளர்கள் யாரும் வெற்றி பெறவில்லை. இந்தத் தேர்தலிலும்சுயேச்சைகள்யாரும்வெற்றிபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.